# அ.தி.மு.க. பங்களாவில் தி.மு.க. வி.ஐ.பி.?

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையில் உள்ள ஒரு பங்களா அ.தி.மு.க. முக்கியப் பிரமுகருக்குச் சொந்தமானது. வத்தலக்குண்டுவைச் சேர்ந்த அந்தப் பிரமுகர் ஏற்றுமதி தொழில் செய்து வருபவராம். கடந்த சில தினங்களுக்கு முன்பு அந்த பங்களாவுக்கு வந்த தென்மண்டல தி.மு.க. வி.ஐ.பி. ஒருவர் மூன்று நாட்கள் சத்தமில்லாமல் தங்கிவிட்டுப் போயிருக்கிறார். அரசல் புரசலாக முக்கிய அமைச்சர் ஒருவருக்குத் தெரிந்தும் அவர்கூட அந்த வி.ஐ.பி.யைப் பார்க்கப் போகவில்லையாம். ஆனால் அ.தி.மு.க. பிரமுகருக்குச் சொந்தமான பங்களாவில் அவர் ஏன் வந்து தங்கினார் என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது திண்டுக்கல் மாவட்ட உடன்பிறப்பு வட்டாரம்.

## பைஜாமாவில் வாழ்த்து!

தமிழ்நாடு காங்கிரஸ் செயல்வீரர்கள் 'காங்கிரஸ் நட்பகம்' சார்பில், ராகுல் காந்தியின் பிறந்த நாள் விழாவினை காது கேளாத, வாய் பேச முடியாத மற்றும் பார்வையில்லாதவர்கள் பயிலும் பள்ளியான 'லிட்டில் ஃபிளவர் கான்வென்ட்' பள்ளியில் கொண்டாடினார்கள்.

மாற்றுத்திறன் மாணவர்கள் மகரிஷி ஆசிரமத்தில் ஒரு பைஜாமா வாங்கி அதில் பிறந்த நாள் வாழ்த்துக்களை பல வண்ண எழுதுகோல்களில் எழுதிக் கையொப்பமிட்டு அதை ஒரு கண்ணாடிப் பேழையில் வைத்து ராகுல்காந்திக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு அறிவுப் புத்தகங்கள், இனிப்புகள், கேக்குகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சி.டி. மெய்யப்பன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். சேரன்மாதேவி சட்டமன்ற உறுப்பினர் வேல்துரை சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். வாசன் பாசறை தலைவர் ராஜ்மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு காங்கிரஸ் மாநில அமைப்புச் செயலாளரும், காங்கிரஸ் நட்பகத்தின் நிறுவனருமான கவிஞர் க.ராமலிங்கஜோதி ஏற்பாடு செய்திருந்தார்.


ராகுல் பிறந்தநாளில்...

## 'சொக்க' வைக்கும் பிரச்சாரம்!

"நமது அன்னைத் தமிழை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்திட பல ஆண்டுகளாக அனைவரும் வேண்டினர். ஆனால் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பொறுப்பேற்றபோது அதன் வழிகாட்டுதல் குழு தலைவர் அன்னை சோனியா காந்தி அறிவித்த முதல் செய்தி 'தமிழ் செம்மொழி' என்பதும், அதற்கான நிதி ஒதுக்கீடும்தான். இதனைத் தொடர்ந்து வலியுறுத்தி பெற்றுத் தந்தவர் தமிழக முதல்வர் கலைஞர். இந்த விஷயத்தைக் கடந்த கால் நூற்றாண்டாக காங்கிரஸ் கட்சியே வாழ்க்கை முறை என்றுணர்ந்து நிறம் மாறாமல், தடம் புரளாமல் காங்கிரஸ் பணியாற்றும் நாங்கள் இந்நாளில் நினைவு கூரும் வகையில் இந்த அழகிய பிளாஸ்டிக் விசிறியினை பல்லாயிரக்கணக்கில் தமிழக மக்களுக்கு வழங்கி வருகிறோம்.



மேலும் கோவையில் ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த மாநாடு நமது வரிப்பணம் ரூ.400கோடியில் நடத்தப்படுகிறது. எனவே இதனை ஒரு கட்சியின் மாநாடாகக் கருதிவிட முடியாது. நம் தமிழ் இனத்திற்கான மாநாடாகக் கருதி உண்மையான தமிழ் உணர்வுள்ளோர் அனைவரும் பங்கேற்று நம் அருந்தமிழுக்குப் பெருமை சேர்த்திட வேண்டும்" என்று மக்களை சந்தித்துப் பேசி வருகிறது மதுரையைச் சேர்ந்த காங்கிரஸ் குழு. இதைத் தலைமையேற்று நடத்துபவர் மதுரை மாவட்ட காங்